ஆதிதிராவிடர் நல ஆணையரின் செயல்முறைகள், சென்னை–5.

முன்னிலை: திரு.த.ஆனந்த், இ.அ.ப.,

ந.க.எண். இ4/25838/2025 நாள்.15.12.2025.

பொருள்: பணியாளர் தொகுதி – சென்னை மாவட்டம் – மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலகம் – இளநிலை உதவியாளர் – திரு.மு.மிதுன் என்பவரது பணியினை வரன்முறை செய்து ஆணையிடுதல் –சார்பு

பார்வை:
1. சென்னை மாவட்ட ஆட்சித்தலைவரின் செயல்முறைகள் எண்.ய5/22302/2016, நாள்.24.05.2023.
2. அரசாணை நிலை எண்.33 பணியாளர் நலம் மற்றும் திறன் மேம்பாட்டு (Q1) துறை நாள்.08.03.2023.
3. தொடர்புடைய ஆவணங்கள்.

******

<u>ஆணை:–</u>

சென்னை மாவட்டத்தில் வன்கொடுமை தடுப்பு சட்டத்தின் கீழ் திரு.சி.முருகன் என்பவர் வன்கொடுமையால் பாதிக்கப்பட்டு 05.06.2016 அன்று காலமானதால் வன்கொடுமை தடுப்பு சட்டம் திருத்த விதிகள் 2016–ன் கீழ் தனியரது மகன் திரு.மு.மிதுன் என்பவருக்கு பார்வை 1ல் காணும் மாவட்ட ஆட்சி தலைவர் அவர்களின் செயல்முறைகள் மூலம் ஆதிதிராவிடர் நல துறையில் பணிநியமனம் வழங்கப்பட்டு சென்னை மாவட்டம், மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலகத்தில் இளநிலை உதவியாளராக 01.06.2023 முற்பகல் முதல் பணியில் சேர்ந்து பணிபுரிந்து வருகிறார்.

இந்நிலையில், பார்வை 2–ல் காணும் அரசாணையில் கருணை அடிப்படையில் பணிநியமனம் பெற்ற பணியாளர்களின் பணியினை வரன்முறை செய்வது தொடர்பாக எந்த வித விதி தளர்வும் தேவையில்லை எனில் பணி நியமன அதிகாரியே சம்மந்தப்பட்டவர்களின் பணியினை வரன்முறை செய்து ஆணையிடலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நேர்வில் வன்கொடுமை தடுப்பு சட்டம் திருத்த விதிகள் 2016–ன் கீழ் ஆதிதிராவிடர் நலத்துறையில் பணிநியமனம் வழங்கப்பட்டு சென்னை மாவட்டம், மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலகத்தில் இளநிலை உதவியாளராக 01.06.2023 முற்பகல் முதல் பணிபுரிந்து வரும் திரு.மு.மிதுன் என்பவர் அப்பணிடத்திற்கான உடற்தகுதியைப் பெற்றிருக்க வேண்டும் எனும்

Scanned with OKEN Scanner

நிபந்தனைக்குட்பட்டு, அன்னாரது பணியினை அவர் பணியேற்ற நாளான 01.06.2023 முற்பகல் முதல் வரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது. இவ்வாறு வரன்முறை செய்யப்படுவதால் திரு.மு.மிதுன் இளநிலை உதவியாளர் என்பவர் முதல் ஆண்டு ஊதிய உயர்வு பெற விதிகளின் படி தகுதியுடையவராகிறார்.

ஒம்./-த.ஆனந்த்.,
ஆதிதிராவிடர் நல ஆணையர்.

ஆதிதிராவிடர் நல ஆணையருக்காக.

பெறுநர்.

திரு.மு.மிதுன்,
இளநிலை உதவியாளர்,
மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலகம்,
சென்னை மாவட்டம்.

நகல்.

1. அரசு செயலாளர்,
   ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை,
   தலைமைச்செயலகம், சென்னை – 9.
2. மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர்,
   மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலகம்,
   சென்னை மாவட்டம்.
3. "இ5" இருக்கை.
4. முக்கிய ஆணைத் தொகுப்பு.

Scanned with OKEN Scanner